இரத்தம் எப்பொழுது தேவையோ, மீண்டும் அவர்கள் இரத்தம் வழங்குவதற்குரிய வாய்ப்பையும் தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது முதன்முறையாக நடக்கக்கூடிய நிகழ்வாகும். 60,000 யூனிட்டுகளை வைத்துப் பாதுகாக்கும் அளவிற்கு நமக்கு capacity இருக்கிறது. 20,000 பேர்தான் இரத்த தானம் கொடுக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு 33,000 யூனிட்டுகள் தேவையிருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய பிறந்தநாளையொட்டி, நம்முடைய போக்குவரத்துத் தொழிலாளர்கள் தமிழக அரசின் சார்பாக மிகப் பெரிய அளவில் இரத்த தான முகாம் நடத்தி, ஒரு கின்னஸ் சாதனையைப் படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தானத்திலே சிறந்தது, இரத்த தானம். அந்த நிகழ்வு குறித்து நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மிக அழகாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். ‘சுவையான முறுக்கு என்று நீங்கள் கொசுவர்த்தியைக் கடிக்கிறீர்கள்’ என்று நேற்றைக்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதுபோன்ற செய்திதான் என்னுடைய நினைவிற்கு வருகிறது என்று சொல்லி, இது நல்ல நிகழ்வு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12—00

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

5. கவன ஈர்ப்பு

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை மூட இருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அர. சக்கரபாணி, முனைவர் க. பொன்முடி, திரு. தங்கம் தென்னரசு, முனைவர் கோவி. செழியன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

2018 ஜூன் 28]

***முனைவர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை மூட இருப்பது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

தமிழகத்தில் தொடக்கக் கல்வியில் 1 முதல் 5 வகுப்புகளுக்கு இடைநிலை ஆசிரியர் பட்டயப் படிப்பு படித்தவர்கள் மட்டுமே நியமனம் செய்யப்படுகின்றனர். தொடக்கக் கல்வியில் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை உள்ள அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் 29,297 ஆகும். இதில் 85,109 இடைநிலை ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இதிலும் 4,000–க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் உபரி ஆசிரியர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 29–4–2017 அன்று நடத்தப்பெற்ற ஆசிரியர் தகுதித் தேர்வில் (இடைநிலை ஆசிரியர்–தாள் 1) 2,41,555 ஆசிரியர் பட்டயப் பயிற்சி முடித்தவர்கள் தேர்வு எழுதியுள்ளனர். இவர்கள் அனைவரும் ஆசிரியர் பட்டயப் பயிற்சி முடித்துவிட்டு வேலைக்காகக் காத்திருப்பவர்கள். மேலும், இடைநிலை ஆசிரியர்களின் நியமனங்கள் வெகுவாகக் குறைந்துள்ளதன் அடிப்படையில், தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பில் மாணவர்கள் சேருவதற்கு விருப்பம் காட்டுவதில்லை.

2. தமிழகத்தில் அரசு, அரசு நிதி உதவிபெறும் மற்றும் சுயநிதியில் மொத்தம் 366 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் அரசு நடத்தும் 32 மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் (DIET) 2,650 இடங்களும், 8 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் (GTTI) 480 இடங்களும், 7 ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் (BITE) 350 இடங்களும் இருந்தன. இதில் சென்ற ஆண்டில் முறையே 1,047,113 மற்றும் 66 இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. இவை மட்டுமல்லாமல்,

40 அரசு நிதியுதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் உள்ள 3,360 இடங்களில், 459 இடங்களும், 279 சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் உள்ள 19,150 இடங்களில், 3,419 இடங்களும் மட்டுமே நிரப்பப்பட்டன. நடப்புக் கல்வி ஆண்டில் (2018–2019) உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 10 மற்றும் சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 47 ஆகியவற்றில் மாணவர் சேர்க்கையை நிறுத்திக் கொள்வதற்கும், இந்நிறுவனங்களை மூடுவதற்கும் அனுமதி வேண்டியுள்ளனர்.

3. இப்படிப்பட்ட நிலையே அனைத்து மாநிலங்களிலும் உள்ளதால், மத்திய அரசு ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பணிமுன் பயிற்சிகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும், இந்நிறுவனங்களில் பணிபுரியும் விரிவுரையாளர்களைப் பணியிடைப் பயிற்சிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளவும் அறிவுரை வழங்கியதோடு மட்டுமல்லாமல், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் கல்விப்புலத்தில் உள்ள பிரச்சினைகள் சார்ந்து, செயல் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு தீர்வுகள் காணவும் அறிவுரை வழங்கியிருந்தது.

4. இவை அனைத்தையும் கருத்தில்கொண்டு, வகுப்பறை செயல்பாடுகளில் ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்களை அதிகரிக்கும் நோக்கத்தில், பணியிடைப் பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும், 20 மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பணிமுன் பயிற்சியைத் தற்காலிகமாக நிறுத்தி அப்பயிற்சி நிறுவனங்களில் பணியிடைப் பயிற்சி மட்டும் நடத்தவும், 12 மாவட்டங்களில் பணிமுன் பயிற்சி மற்றும் பணியிடைப் பயிற்சி நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, சென்னை, திருவண்ணாமலை, கடலூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, பெரம்பலூர், திருவாரூர், புதுக்கோட்டை, விருதுநகர், தேனி, நீலகிரி, திருநெல்வேலி ஆகிய 12 மாவட்டங்களில் பணிமுன் பயிற்சி மற்றும் பணியிடைப் பயிற்சியும், திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம், சேலம், தருமபுரி, நாமக்கல், கரூர், திருச்சி, அரியலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், கோயம்புத்தூர், திருப்பூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய 20 மாவட்டங்களில் பணியிடைப் பயிற்சிகளும் செயல்படுத்த முடிவு செய்து ஆணை வெளியிடப்பட்டது. இவ்வாறு பணியிடைப் பயிற்சி மட்டுமே செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் செயல்பட்டுவரும் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் (GTTI)

2018 ஜூன் 28] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

மற்றும் ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறவனங்கள் (BITE) ஆகியவற்றில் உள்ள பணிமுன் பயிற்சிக்கான இடங்கள் நிரப்பப்படும். எடுத்துக்காட்டாக, நாகப்பட்டினம் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் உள்ள 50 இடங்கள் இந்த ஆண்டு நிரப்பப்படாது. அதேசமயம், வேதாரண்யத்தில் (நாகை மாவட்டம்) செயல்படும் ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் உள்ள 50 இடங்கள் பூர்த்தி செய்யப்படும். (சென்ற ஆண்டு நாகப்பட்டினத்தில் உள்ள மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் 18 மாணவர்கள் மட்டுமே சேர்ந்துள்ளனர்; வேதாரண்யத்தில் ஒரு மாணவர்கூடச் சேரவில்லை).

5. தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தளவில் ஒரு மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும், ஓர் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனமும் இயங்கி வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் திருவாரூர் மாவட்டத்தில் சேருவதற்கு அரசாணையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், இம்மாவட்டத்தில் சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 15 இயங்கி வருகின்றன. இதில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் தஞ்சாவூரில் அனுமதிக்கப்பட்ட 50 இடங்களில் சென்ற ஆண்டு 46 மாணவர்கள், தஞ்சாவூர் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் அனுமதிக்கப்பட்ட 40 இடங்களில் 22 மாணவர்கள், 15 சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் அனுமதிக்கப்பட்ட 1,050 இடங்களில் 174 மாணவர்கள் மட்டுமே சேர்ந்துள்ளனர். எனவே, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி பணிமுன் பயிற்சிக்கான இடங்களைக் குறைக்கும்போது, அதே மாவட்டத்தில் உள்ள அரசு/ஒன்றிய அளவில் செயல்படும் நிறுவனங்களில் உள்ள இடங்கள் குறைக்கப்படவில்லை. மேலும், பெண்கள்/ஆண்கள் மட்டுமே பயிலும் நிறுவனங்களிலும் இருபாலரும் சேர்ந்து படிக்கவும் வழிவகை செய்யப்படும். இதனால் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது.

6. எனவே, மாணவர்களின் நலன் கருதி ஆசிரியர்களின் கற்பிப்புத் திறனை வளர்க்க பணியிடைப் பயிற்சி மிகவும் அத்தியாவசியம் எனக் கருதப்பட்டுள்ள நிலையிலும், தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பில் மாணவர்கள் சேர அதிக அளவில் விரும்பவில்லை என்பதையும் கருத்தில்கொண்டு, பணிமுன் பயிற்சிக்கான இடங்களைக் குறைக்கும்போது அரசு கவனமாகச் செயல்பட்டுள்ளது. மாணவர்கள் எதிர்காலத்தில் அதிக

அளவில் பணிமுன் பயிற்சி பெற விரும்பினால், தேவைக்கேற்ப பணிமுன் பயிற்சி அளிக்க வழிவகை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இதுபோன்ற ஆசிரியர்கள் எவ்வளவு நபர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்ற ஒரு புள்ளிவிவரம் விவர அறிக்கையில், கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையுள்ள அரசு மற்றும் அரசு நிதி உதவிபெறும் பள்ளிகள் 29,297 ஆகும். ஆசிரியர்கள் உபரி ஆசிரியர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்ட தகுதித் தேர்வு போன்றவை குறித்தெல்லாம் விவர அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள். அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் ஆகிய இரண்டையும் சொல்லியிருக்கிறீர்கள். தனியார் பள்ளிகள் எவ்வளவு இருக்கின்றன? அவற்றில் எத்தனை ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள்? அந்தப் பள்ளிகளிலும் இந்தப் பயிற்சி பெற்றவர்களைத்தான் நியமிக்க வேண்டும் என்று அரசாணை இருக்கிறது. அதனால் அதையும் நீங்கள் கணக்கில் எடுத்துக்கொண்டு, இதனை நிர்ணயிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தனியார் பள்ளிகள்தான் இன்றைக்கு அதிக அளவில் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளில் 1 முதல் 5 வரையுள்ள வகுப்புகளில், Diploma in Teacher Education–ல் தேர்ச்சி பெற்றவர்களைத்தான் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்று அரசாணை இருக்கிறது. நாங்கள் படிக்கின்ற காலத்தில் எல்லாம், Higher Grade teacher மற்றும் Secondary Grade Teacher என்று உண்டு. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் E.S.L.C படித்தவர்களே, 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையில் பாடங்கள் நடத்துவார்கள். அப்போதெல்லாம் secondary school–தான். 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரையில் பாடம் நடத்தும் ஆசிரியர்களுக்கு Secondary Grade Teachers என்று பெயர். அதன்பிறகு 8 ஆம் வகுப்பிற்குமேல் High school–ல் இருப்பவர்களுக்கு, B.Ed., படித்த ஆசிரியர்கள்தான் பாடம் நடத்துவார்கள். இதுதான் Teachers' Training–ன் method. தற்போது இவையெல்லாம் மாறிப்போய் இன்றைக்கு elementary

2018 ஜூன் 28] [முனைவர் க. பொன்முடி]

schools–க்கே B.Ed. Teachers–ஐ நியமிக்கின்ற அளவிற்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

காரணம் 7, 8 வருடங்களுக்கு முன்பு, SC quota–ல் எங்கள் விழுப்புரம் மாவட்டத்திலேயே அந்தப் பணியிடங்களில் vacancy வந்துவிட்டது. Diploma in Teacher Education–ல் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைக்கவில்லை. அப்போதுதான் B.Ed. படித்தவர்கள் விரும்பினால், ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றச் செல்லலாம் என்று ஓர் அரசாணை வெளியிடப்பட்டு, இன்று வரையில் B.Ed., படித்தவர்களும் ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. 20 மாவட்டங்களில் இதுபோன்ற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை மூடப்போவதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். 20 மாவட்டங்களில் பள்ளிகளை மூடிவிட்டால், அங்கிருக்கின்ற மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள். காலத்திற்கேற்ப இதுபோன்ற பணிகள் எல்லாம் வளருகின்ற வாய்ப்புகள் இருக்கின்றன. தற்போதைய சூழ்நிலையில் வேண்டுமானால், சிலர் வராமல் இருக்கலாம். ஆனால், நீங்கள் 10 மாவட்டங்களில் இருக்கின்ற ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுப்பதாகச் சொல்கிறீர்கள். It is in–service training. அது வேறு; அதுவும் தேவைதான். தேவையில்லையென்று நான் சொல்லமாட்டேன். ஏனெனில், நீங்கள் புதுப் புதுப் பாடத்திட்டங்களையெல்லாம் கொண்டுவரும்போது, ஆசிரியர் பயிற்சி படித்துவிட்டு வருபவர்கள், தங்களை மேலும் தயார் செய்து கொள்வதற்காக in–service Training தேவை. அதை 10 மாவட்டங்களில் திறக்கின்றீர்கள். அதேபோன்று, 20 மாவட்டங்களில் இருக்கின்ற Teacher Training Schools–ஐ மூடுகிறோம் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அது அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் பாதிப்பாக இருக்கும். எங்கள் விழுப்புரம் மாவட்டமும் அவற்றில் ஒன்றாக இருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்ப்பது, நீங்கள் சொல்லியிருக்கின்ற மிக முக்கியக் காரணம், அங்கு அதிக அளவில் மாணவர்கள் சேருவதில்லை என்பதுதான். சேருவதில்லை என்பது வேறு; வேலைவாய்ப்பு இருந்தால், அவர்கள் சேர்ந்துவிடுவார்கள். சில தனியார் பள்ளிகளில் இதுபோன்று Teachers' Training படிக்காதவர்களை ஆசிரியர்களாக நியமிக்கிறார்கள். அதுபோன்று நியமிக்கின்றார்களா என்பதைக் கண்காணித்து, ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களைத்தான் compulsory–ஆக நியமிக்க வேண்டும் என்கிற சூழ்நிலை வந்தால், நிச்சயமாகப் பணியிடங்கள் அதிகரிக்கும்;

மாணவர் சேர்க்கையும் அதிகரிக்கும் என்பதைத் தெரிவித்து, இதிலே மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களது கவனத்தை ஈர்த்து, மூடுகின்ற திட்டத்தைத் தயவுசெய்து கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் இரண்டு கேள்விகளையும் ஒன்றாகக் கேட்டுவிட்டீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, 20 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் மூடப்படுமா என்ற ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அந்தப் பயிற்சி மையங்களை மூடுகின்ற நோக்கம் இந்த அரசிற்கு இல்லை. இப்போது மாணவர்களுடைய சேர்க்கை எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற காரணத்தின் அடிப்படையில், அரசு அதனைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் மாணவர்கள் இல்லாமல் இருந்தாலும், அவற்றை ஆசிரியர்களுக்கான பயிற்சி அளிக்கும் மையங்களாக உருவாக்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, பயிற்சி மையங்களை மூடுகின்ற நோக்கம் இந்த அரசிற்கு இல்லை. அந்த மையங்கள் மூலமாக ஆசிரியர்களுக்குக் கூடுதல் பயிற்சி அளிப்பதற்காக அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, எங்கள் விழுப்புரம் மாவட்டத்திலும் ஆசிரியர் பயிற்சி மையம் இருக்கிறது; அதை மூடும் நோக்கம் இந்த அரசிற்கு இருக்கிறதா என்று கேட்டார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், இன்றைக்குப் பயிற்சி பெற்றிருக்கின்ற ஆசிரியர்களுடைய எண்ணிக்கை, 2,41,555; அந்த ஆசிரியர்கள் பயிற்சி பெற்று, வேலை இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர் பட்டயப் படிப்பு படித்துவிட்டு வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கின்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 12–05

தமிழ்நாட்டிலே இன்றைக்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் படித்து ஆசிரியர் பணியிடங்களுக்கு தகுதி பெற்றிருக்கின்றவர்களின் எண்ணிக்கை 84,161 பேர். அவ்வாறு ஆசிரியர்களாக, ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்வு செய்யப்பட்டும், 2012, 2013, 2014 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அவர்களில் சிலருக்கு வேலைவாய்ப்பு அளிக்க

2018 ஜூன் 28] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

இயலாத சூழ்நிலை இருக்கிறது. அதன்காரணமாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை இன்றைக்குக் குறைந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இந்தச் சூழ்நிலையில், அந்த 20 ஆசிரியர் பயிற்சி மையங்களை மூடுகின்ற நோக்கம் இந்த அரசுக்கு இல்லை என்பதையும், அதேநேரத்தில் அங்கு மாணவர் சேர்க்கை என்று வருகிறபோது, தொடர்ந்து ஆசிரியர் பயிற்சி அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே, 20 மாவட்டங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அங்கே பணியிடைப் பயிற்சிகளை வழங்கிட முடிவு செய்து, ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பணியிடைப் பயிற்சி கொடுப்பது சரி; ஆனால், நான் basic ஆகச் சொல்கிற அந்த Diploma in Teacher Education என்பதை மூடுகிறீர்களா? இல்லையா? அதைத் தொடர்ந்து நீங்கள் நடத்தினீர்கள் என்றால் மிகவும் சந்தோஷம். அந்த நிறுவனங்களை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாநிலங்களிலும், இதுபோன்ற நிலை உள்ளதால், மத்திய அரசு என்ன அறிவுரை வழங்கியுள்ளது என்பதையும் விவர அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள். கல்வித் துறையைப் பொறுத்தவரையில், மாநிலத்திற்கு இருக்கின்ற உரிமைகளை நீங்கள் தயவுசெய்து விட்டுக் கொடுக்கக் கூடாது. அந்த உரிமைகளைப் பாதுகாக்கின்ற வகையில், இந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களைத் தொடர்ந்து நடத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, அந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை மூடுகிற நோக்கம் அரசுக்கு இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த 20 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை மூடுகின்ற நோக்கம் இந்த அரசுக்கு இல்லை. அந்த ஆசிரியர்

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2018 ஜூன் 28

பயிற்சி நிறுவனங்களில் மாணவர்களின் சேர்க்கை வருகின்றபோது, அந்தப் பயிற்சிப் பள்ளிகள் தொடர்ந்து அங்கே நடைபெறும். ஆகவே, அவற்றை மூடுகின்ற நோக்கம் இந்த அரசுக்கு இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர்களுடைய சேர்க்கை குறைவாக இருக்கின்றபோது, நாம் எப்படி பயிற்சி அளிக்கப் போகிறோம் என்று சொன்னால், அருகில் இருக்கின்ற மாவட்டங்களில் உள்ள பயிற்சி மையங்களில் அந்த மாணவர்களை சேர்க்கின்ற நிலை உருவாக்கப்படும். உதாரணத்திற்கு, விழுப்புரம் மாவட்டத்தில் குறைவான அளவில் மாணவர்கள் சேர்க்கை இருந்தால், அருகில் இருக்கின்ற மாவட்டத்திலே இருக்கின்ற பயிற்சிப் பள்ளிகளிலே அவர்கள் சேர்க்கப்படுவார்கள். ஒரு மாவட்டத்தில் குறைந்த எண்ணிக்கையாக 5 மாணவர்கள் என்ற அளவில் சேர்க்கை இருக்கிறது என்று சொன்னால், பக்கத்தில் இருக்கின்ற மாவட்டத்தில் அந்த மாணவர்களைச் சேர்த்து, அவர்கள் அங்கு படிப்பதற்கு வழிவகை செய்யப்படும். அதேநேரத்தில், அந்தப் பயிற்சி மையங்களை மூடுவது இந்த அரசின் நோக்கமல்ல என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில், ஏறத்தாழ 2,41,555 பேர் ஆசிரியர் பட்டயப் பயிற்சி முடித்துவிட்டு,இன்றைக்குப் பணியினைத் தேடிக்கொண்டு இருக்கிற நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது தனியார் பள்ளிகளிலும் இதுபோன்ற ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைத்தான் நியமிக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறீர்கள். அதை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு அந்த நடவடிக்கையை மேற்கொள்ளும். ஏனென்று சொன்னால், நம்முடைய அரசுப் பள்ளிகளிலே என்ன விதிமுறைகள் இருக்கின்றனவோ, என்ன சட்ட விதிமுறைகள் இருக்கின்றனவோ அவற்றைத்தான் தனியார் பள்ளிகளும் பின்பற்ற வேண்டும் என்ற ஓர் ஆணை அரசால் பிறப்பிக்கப்படவிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், தனியார் பள்ளிகளில் பணியில் சேருகின்ற ஆசிரியர் பெருமக்களை எதிர்காலத்திலே பணியிலிருந்து வெளியேற்றுகின்ற நிலை இதன்மூலம் தடுக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கெல்லாம் சட்டமுன்வடிவுகளை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூன் 28] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஒரு சில பள்ளிகளில், அதாவது 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை உள்ள தொடக்கப் பள்ளிகளில், மாணவர்களின் எண்ணிக்கையை நாம் பார்க்கின்றபோது, 31 பள்ளிகளில் ஒரு மாணவர்கூட இல்லாத நிலை இருக்கிறது. அதேபோன்று, 848 பள்ளிகளில், இன்றைக்கு 1 முதல் 10 மாணவர்கள் என்ற குறைந்த எண்ணிக்கையில் இருக்கின்ற நிலை இருக்கிறது. குறிப்பாக, ஒரு ஆசிரியருக்கு 40 மாணவர்கள் இருக்க வேண்டும் என்ற நிலையை மாற்றி, ஈராசிரியர் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் அந்த நிலையையும் மனதிலே கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். அரசு எடுக்கின்ற அத்தகைய நடவடிக்கைகளுக்கு உங்களைப் போன்றவர்கள் ஒத்துழைப்பு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராஜஸ்தான் போன்ற மாநிலங்களில், மாணவர்கள் எண்ணிக்கை எங்கெங்கு குறைவாக இருக்கிறதோ அதைக் கண்டறிந்து, அந்தப் பள்ளிகளின் அருகிலே இருக்கின்ற மற்ற பள்ளிகளில் அந்த மாணவர்களைச் சேர்த்து, அவர்களை சிறந்த கல்வியாளர்களாக உருவாக்குவதற்காக, ஈராசிரியர் பள்ளிகளை, நான்கு ஆசிரியர் பள்ளிகளாக மாற்றி, சிறந்த கல்வியைக் கற்றுத் தருகிறார்கள். ஆனால், இங்கே 848 பள்ளிகளிலே மாணவர்கள் எண்ணிக்கைகுறைவாகஇருக்கிறதுஎன்றுசொன்னவுடன்,அதற்காக அறிக்கைகள், கோரிக்கைகள் எல்லாம் வைக்கப்படுகின்றன. என்னைப் பொறுத்தவரையில், மாணவர்களுக்கு சிறப்பான முறையில் கல்வியைக் கற்றுத் தரவேண்டும் என்று சொன்னால், நான்கு ஆசிரியர் பள்ளிகள் இருக்கின்றபோதுதான் அதனை மிகவும் சிறப்பாகச் செய்ய முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, எல்லோரும் முழு மனதோடு, ஒத்துழைப்பு தருகின்றபோதுதான் எதிர்காலத்தில் சிறந்த மாணவர்களை உருவாக்கிட முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, எந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியையும் மூடும் நோக்கம் இந்த அரசுக்கு இல்லை. 848 பள்ளிகளில் இன்றைக்கு மாணவர் சேர்க்கையில் ஒருவர்கூட இல்லை என்று சொன்னாலும்கூட, அங்கே மாணவர்களைச் சேர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அறிவுரைகள் வழங்கப்பட்டு, செப்டம்பர் மாதம் வரை அவர்களுக்குக் காலவரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அங்கு மாணவர்கள் சேரும்போது, அந்தப் பள்ளிகள் தொடர்ந்து நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.